# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2003, செத்தெம்பர் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

## 2003 ஆம் ஆண்டின் 26 இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம்

[2003 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.– ஓ. 1/2003
4748

**இலங்கையில் பெற்றோலிய வளங்களை அகழ்ந்து தேடுவதற்கும் மீட்டுப்பெறுவதற்கும் அதனை ஒழுங்குபடுத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் குறித்தசில ஏற்பாடுகளை நீக்குவதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கரு மங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதலும் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்).

### பாகம் I

### பெற்றோலிய வளங்களின் சொத்துவம்

பெற்றோலிய வளங்களின் சொத்துவம் அரசுக் குரித்தாதல்.

2. இலங்கையின்

(அ) காணி இடப்பரப்பின் உள்மேற்பரப்பினுள் ;

(ஆ) உள்துறை நீர்ப்பரப்புகள், பாரம்பரிய நீர்ப்பரப்புகள், ஆள்புலக்கடல், அண்மித்த வலயம், பெருநில வரம்பு, அத்துடன் பிரத்தியேகப் பொருளாதார வலயம்,

என்பவற்றினுள் இயற்கையாக ஏற்படும் அனைத்துப் பெற்றோலிய வளங்களினதும் முழுச் சொத்துவம், அத்தகைய பெற்றோலிய வளங்கள் எந்த மண்ணின் கீழ் காணப்படுகின்றனவோ அந்த மண்ணின் சொத்துவத்தின்

அல்லது வேறுவகையில் எவரேனும் ஆள் அதற்குக் கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் உரிமை எது எப்படியிருப்பினும் அரசுக்கு உரித்தாதல் வேண்டும்.

*அரச சர்வதேச நடைமுறைக் கிணங்க பெற்றோலிய வளங்களை அபிவிருத்தி செய்தல்.*

**3.** அரசானது, பெற்றோலிய வளங்களை அகழ்ந்து தேடுதலும் தேடிப் பயன்படுத்துதலும், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நடைமுறைகளையும் எண்பிக்கப்பட்ட தொழில்நுட்பவியலையும் பின்பற்றி முதலீட்டாளர் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு சாத்தியப்படக்கூடிய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

*பெற்றோலிய வளங்களை அகழ்ந்து தேடல் தொடர்பிலான உடன்படிக்கைகள்.*

**4.** (1) அமைச்சரவை எவரேனும் முதலீட்டாளருடன் பெற்றோலிய வளங்களின் நில அளவை, அகழ்ந்து தேடல் அத்துடன் பயன்படுத்துதல் என்பவற்றை ஊக்குவிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்காகவும் அதன் சார்பிலும் உடன்படிக்கைகளைச் செய்துகொள்வதற்கான தத்துவத்தை அமைச்சருக்குக் கையளிக்கலாம்.

(2) ஏழாம் பிரிவின் நியதிகளின்படி இலங்கை அரசாங்கத்துடன் செய்துகொண்ட பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான அத்தகைய உடன்படிக்கை ஒவ்வொன்றும் இலங்கை அரசாங்கத்துக்கும் ஆளொருவருக்கும் அல்லது ஆட்களின் குழுவொன்றிற்கும் இடையிலாதல் வேண்டும்.

## பாகம் II

## பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திக் குழு

*பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திக் குழுவைத் தாபித்தல்.*

**5.** (1) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திக்குழு என அறியப்படும் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் (இதனகத்துப்பின்னர் பெ.வ.அ.கு.) இதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயனுறுதியுடன் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) குழு அமைச்சரால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) பெற்றோலிய வளங்களின் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் : இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) மின்வலு என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(இ) சக்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஈ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(உ) சுற்றாடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஊ) இயற்கை வளங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(எ) கடற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஏ) சமுத்திர வளங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஐ) பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;

(ஒ) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச்சபையின் தவிசாளர் ;

(ஓ) கொள்கை அபிவிருத்தி, அமுலாக்கல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சினுடைய நியமித்தர் ஒருவர் ;

(ஔ) பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் நியமித்தர் ஒருவர். இவர் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி தொடர்பாக அவசியமான தகைமைகளும் அனுபவமும் கொண்ட ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2) இன் (அ) முதல் (ஐ) வரையிலான உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விடயங்கள் ஒரு அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்படுமிடத்து அல்லது ஒரு அமைச்சரின் பொறுப்பிலிருக்குமிடத்து, அப்போது அத்தகைய விடயங்கள் தொடர்பில் அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி மாத்திரமே இருத்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (2) இன் (ஓ), (ஔ) என்னும் பந்திகளின் கீழ் நியமிக்கப்பட்ட ஆட்கள் இலங்கையில் பெற்றோலிய வளங்களின் அபிவிருத்தியில் வர்த்தக ரீதியிலான அக்கறை எதனையும் கொண்டிருத்தலாகாது.

(5) பெ.வ.அ.கு.வுக்கு, பெற்றோலிய வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியின் தலைமையிலான செயலகமொன்றினால் துணை புரியப்படுதல் வேண்டும். (இவர் இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவார்.).

பெ.வ.அ.கு.வின் தத்துவங்களும் பணிகளும்.

6. பெ.வ.அ.கு.வின் தத்துவங்களும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) இலங்கையில் பெற்றோலிய வளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதனை இலக்காகக்கொண்ட கொள்கைகளை வகுத்தலும் திட்டங்களைத் தயாரித்தலும் ;

(ஆ) விலைமனுக்களைக் கோருதலும் அகழ்ந்து தேடப்படும் எல்லை வரையறுக்கப்பட்ட காணித் துண்டுகள் தொடர்பில் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கைகளைச் செய்ய எண்ணும் எவரேனும் முதலீட்டாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற அத்தகைய விலை மனுக்களுக்கு மறுமொழியாகப் பெறப்பட்ட எவையேனும் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதில் துணைபுரிதலும், விண்ணப்பக்காரர்கள் விதித்துரைக்கப்பட்ட நிதிசார் மற்றும் தொழில்நுட்பத் தகைமைகளை நிறைவேற்றுகின்றார்களா எனத் தீர்மானித்தலும் ;

(இ) பெற்றோலிய வளம் சார்ந்த மாதிரி உடன்படிக்கைகளைத் தயாரித்தல் ;

(ஈ) பெற்றோலிய வளம் சார்ந்த உடன்படிக்கையில் இணைக்கப்படவேண்டிய நியதிகள் பற்றி உடன்படிக்கைக்கென அரசுக்காகவும் அதன் சார்பிலும் மேற்கொள்ளப்படும் இணக்கப் பேச்சுவார்த்தைகளில் துணைபுரிதலும் 4 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அதனை நிறைவேற்றுகைக்குச் சமர்ப்பித்தலும் ;

(உ) பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையொன்றை இறுதியாக முடிவுசெய்யும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுவரும் இணக்கப் பேச்சுவார்த்தைகளில் துணைபுரியும் நியமித்தர் ஒருவரை நியமித்தல் ;

(ஊ) இச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அபிவிருத்தி உரிமங்களால் மேவப்படும் எல்லா அகழ்ந்து தேடும் காணித்துண்டுகள் மற்றும் இடப்பரப்புகள் தொடர்பில் இடாப்புகளையும் தேசப்படங்களையும் வேறு பதிவேடுகளையும் பேணுதல் ;

(எ) இலங்கையிலுள்ள பெற்றோலிய வளங்கள் தொடர்பாக மண்ணியல் ஆராய்ச்சி நிலவுகை இயற்பியல், பொறியியல் மற்றும் பொருளாதார தரவுகளைச் சேகரிக்கச் செய்தல், தொகுக்கச் செய்தல், பகுப்பாய்வு செய்வித்தல், மற்றும் வெளியிடச் செய்வித்தல் ; அத்துடன் புலமைச்சொத்து தொடர்பிலான சட்டம் அவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளுக்கு ஏற்புடைத்தாவதை உறுதிப்படுத்துதல் ;

(ஏ) மண்ணியல் ஆராய்ச்சி மாதிரிகளை சேகரிக்கச் செய்தலும், களஞ்சியப்படுத்தச் செய்தலும், தொழில்நுட்பக் கணிப்பீட்டு நோக்கங்களுக்கு அவை இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்படுவதற்கும் திருப்பிக்கொணரப்படுவதற்கும் அனுமதியளித்தல் ;

(ஐ) இச்சட்டத்தின் நியதிகளின்படி உரிமங்கள் வழங்குவதற்கும் அவற்றை இல்லாதொழிப்பதற்கும் இடைநிறுத்துவதற்கும் அத்துடன் வேறுபடுத்துவதற்கும் அல்லது திருத்துவதற்கும் ;

(ஒ) இதன் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அபிவிருத்தி உரிமங்களை இடைநிறுத்துவதற்கு அல்லது இல்லாதொழிப்பதற்கு ;

(ஓ) இச்சட்டத்தின் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட அபிவிருத்தி உரிமமொன்றில் ஒப்பந்தக்காரரின் பங்கேற்கும் அக்கறையை நியாயமானவையான அத்தகைய நிபந்தனைகள்மீது சாட்டுதல்களை அல்லது கைமாற்றங்களை அங்கீகரித்தல் ;

(ஔ) இலங்கையில் ஒப்பந்தக்காரர்களால் நடத்தப்படும் பெற்றோலியத் தொழிற்பாடுகளைக் கண்காணித்தலும் தொகைகளை அளவீடு செய்தலும், மீட்டுப் பெறப்பட்ட பெற்றோலிய வளங்களின் மாதிரிகளை எடுத்தலும் ; ஒப்பந்தக்காரர் ஒருவரால் பேணப்படும் எவையேனும் புத்தகங்களையும் ; பதிவேடுகளையும் அறிக்கைகளையும் கணக்குகளையும் மாதிரிகளையும் தரவுகளையும் பரிசீலனை செய்தலும் ;

(க) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் கீழ் பெற்றோலிய வளங்கள் சார்ந்த ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகளின்படி அரசுக்கு அவ்வாறு வருமதியான எல்லாக் கட்டணங்களையும் அரசுரிமைப் பணங்களையும் கொடுப்பனவுகளையும் கோருதலும் பெறுதலும், அவற்றை இலங்கைத் திரட்டுநிதியத்திற்கு வரவுவைத்தலும் ; அத்துடன்

(ங) பெ.வ.அ.கு.வின் தத்துவங்களை தகுந்த விதத்தில் பிரயோகிப்பதற்கு அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறான எவையேனும் அத்தகைய விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு, அபிவிருத்தி உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தேவைப்படுத்துதல்.

## பாகம் III

## பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையும் அகழ்ந்து தேடும் காணித்துண்டுகளும் அபிவிருத்தி உரிமங்களும்

*பெற்றோலியத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதன் மீதான மட்டுப்பாடுகள்.*

7. ஆளெவரும் அரசுடன் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றை அல்லது வேறு ஏதேனும் நேரொத்தான உடன்படிக்கையைச் செய்திருந்தாலன்றி அல்லது பெற்றோலியத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு இச்சட்டத்தால் அல்லது அதன் கீழ் வேறுவகையில் அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலன்றி அத்தகைய ஆள் இலங்கையில் பெற்றோலியத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதலாகாது.

*அகழ்ந்துதேடும் காணித் துண்டுகள் தொடர்பில் உடன்படிக்கை செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள்.*

8. (1) பெ.வ..அ.கு. உள்ளூர் அல்லது சர்வதேச ஊடகத்தில் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அல்லது அதற்கு பிரசாரம் வழங்குவதற்கென மிகச் சிறந்ததாக கணிப்பிடப்பட்ட வேறு வழிமுறைகளில், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான நிர்ணயிக்கப்பட்ட அகழ்ந்து தேடும் காணித்துண்டுகள் தொடர்பில் அரசுடன் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வதற்கு விண்ணப்பிக்குமாறு விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தொழில்நுட்ப நிதிசார்ந்த தகைமைகள் கொண்ட ஆட்களுக்கு அழைப்பு விடுக்கலாம்.

(2) எல்லை வரையறுக்கப்பட்ட அகழ்ந்து தேடும் காணித்துண்டானது தொடர்பில் அரசுடன் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், பெ.வ..அ.கு.வுக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், விதித்துரைக்கப்பட்ட விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கை ஒவ்வொன்றும் ஒரு அகழ்ந்து தேடும் காணித்துண்டு தொடர்பில் மட்டுமே இருத்தல் வேண்டும்.

*பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கைகள்.*

**9.** (1) பெ.வ.அ.கு. வினால் 8 ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பங்கள் பெறப்பட்டவிடத்து, பெ.வ.அ.கு. அத்தகைய விண்ணப்பங்களை அமைச்சரவைக்கு அனுப்புதல் வேண்டும். அமைச்சரவை, அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்ததன்பின்னர், பெற்றோலிய தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு அபிவிருத்தியினதும் தொழில்நுட்ப ஆற்றலினதும் அடிப்படையில் மிகச் சிறந்த தகைமையுடையவர் என அதனால் கருதப்படுகின்றவரும் அதன் கருத்துப்படி இலங்கைக்கு பாரிய பொருளாதார நன்மைக்கான பங்களிப்புச் செய்யக்கூடிய வருமான ஆளை விண்ணப்பக்காரர்களிடையேயிருந்து தெரிவுசெய்தல் வேண்டும். (இப்பிரிவில் "விரும்பத்தகுந்த விண்ணப்பகாரர்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவோர்).

(2) அமைச்சரவையானது, அமைச்சரவை நியமித்த இணக்கப் பேச்சுக்குழு (அநிஇகு) என அழைக்கப்பட வேண்டிய இணக்கப் பேச்சுக் குழுவொன்றுக்கு அல்லது பெ.வ. அ.கு.வுக்கு, இயைபான பெற்றோலியவள உடன்படிக்கையில் சேர்க்கப்படுவதற்கு அவர்கள் விதந்துரைக்கின்ற கருமங்களைப் பற்றி இணக்கப் பேச்சுவார்த்தை நடாத்தி அவற்றை அங்கீகாரத்துக்காக அமைச்சரவையின் முன்னர் இடுவதற்கு அதிகாரமளிக்கலாம். அமைச்சரவை அதன்மீது, உடன்பட்டுக் கொள்ளப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட அகழ்ந்து தேடப்படும் காணித்துண்டு அல்லது அதன் பாகம் தொடர்பில் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய உடன்படிக்கை பொருளளவில் இந்நோக்கத்துக்கெனத் தயாரிக்கப்பட்ட மாதிரி உடன்படிக்கைக்கு அமைவானதாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உடன்படிக்கை பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கை எந்த நிபந்தனைகளுக்கு அமைந்தனவாயிருத்தல் வேண்டுமோ அந்த நிபந்தனைகளாக அமைச்சரவையால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்ததாயிருத்தல் வேண்டும். ஏற்புடைத்தான நிபந்தனைகளின் ஏதேனும் திருத்தமும் அல்லது வேறுபாடும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் மாத்திரமே செய்யப்படுதல் வேண்டும்.

*பெற்றோலிய வளங்களை மீட்டுப் பெறுவதற்கான அபிவிருத்தி உரிமங்கள்*

**10.** (1) அகழ்ந்து தேடப்படும் காணித்துண்டொன்றிற்குள் அகழ்ந்து தேடும் தொழிற்பாடுகளை மேற்கொண்டிருக்கும் போது ஒப்பந்தக்காரர் ஒருவர் பெற்றோலிய வளங்களை வர்த்தக ரீதியில் சாத்தியமுள்ள தொகைகளில் பெற்றோலிய

வளங்களைக் கண்டுபிடிக்குமிடத்து, அவர் கருத்திட்ட அபிவிருத்தி மற்றும் முதலீட்டு உத்தேசமொன்றை அங்கீகாரத்துக்காக பெ.வ.அ.கு.வுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய உத்தேச பெ.வ.அ.கு.வினால் ஏற்றுக்கொள்ளப்படற் பாலதாக இருந்து அத்துடன் அத்தகைய உத்தேசத்தை அது அங்கீகரிப்பின் பெ.வ.அ.கு. அவரது பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கை தொடர்புறுத்தும் குறித் தொதுக்கப்பட்ட அகழ்ந்து தேடும் இடப்பரப்பொன்றிற்குள் அவரது உத்தேசத்தில் தரப்பட்டுள்ள அத்தகைய வர்த்தக ரீதியிலான தொகையில் பெற்றோலிய வளங்களை மீட்டுப் பெறுவதற்கான அபிவிருத்தி உரிமத்தை ஒப்பந்தக்காரருக்கு வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பெற்றோலிய வளங்களின் வர்த்தக ரீதியிலான சாத்தியமுள்ள தொகை, ஒன்றுக்கு மேற்பட்ட அகழ்ந்து தேடும் காணித்துண்டுகளில் அமைந்துள்ளவிடத்து, பெ.வ.அ.கு. அத்தகைய வேறு அகழ்ந்துதேடும் காணித்துண்டுகள் தொடர்பில் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கைகள் எவையும் ஏனைய ஒப்பந்தக்காரர்களுடன் செய்துகொண்டிருக்கப்படாவிடில், கண்டுபிடிப்பின் முழுப்பரப்பளவையும்கொண்ட இடப்பரப்பு தொடர்பில் ஒப்பந்தக்காரருக்கு அபிவிருத்தி உரிமம் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

*அபிவிருத்தி உரிமங்களுடன் இணைசேர்க்கப்பட வேண்டிய நிபந்தனைகள்.*

**11.** (1) பெ.வ.அ.கு.வினால் 10 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அபிவிருத்தி உரிமத்தால் மேவப்பட்ட இடப்பரப்பிற்குள் பெற்றோலியத் தொழிற்பாடுகள் திறமையாக மேற்கொள் ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, அத்தகைய உரிமம் எந்த நிபந்தனைகளுக்கு அமைவாதல் வேண்டுமோ அந்த நிபந்தனைகளைப் பற்றி அமைச்சரவை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கலாம். ஏற்புடைத்தான நிபந்தனைகளுக்கான ஏதேனும் திருத்தம் அல்லது வேறுபாடு அமைச்சரவையின் அங்கீகாரத் துடன் மாத்திரமே செய்யப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சரவை, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுட னும் பெ.வ.அ.கு.வினதுமான கலந்தாலோசனையுடன் –

(அ) கப்பற்போக்குவரத்து சுற்றாடல் பாதுகாப்பு, சமூகங்கள் மீது பாதகமான சமூக தாக்கங்களைத்

தணித்தல் என்பவற்றிற்காகவும், தேசிய பாது காப்பின் நலன் கருதியும் அபிவிருத்தி உரிமம் ஒன்றுடன் இணைக்கப்படவேண்டிய மேலதிக நிபந்தனைகளையும் ;

(ஆ) எந்த இடப்பரப்பிற்கு அபிவிருத்தி உரிமம் வழங் கப்படுகின்றதோ அந்த இடப்பரப்பிற்குள் மேற் கொள்ளப்படும் பெற்றோலிய தொழிற்பாடுகளால் பாதகமாகப் பாதிக்கப்படக்கூடிய எவரேனும் ஆளுக்கு ஒப்பந்தகாரரால் செலுத்தப்படவேண்டிய நியாயமான நட்ட ஈட்டுத்தொகையையும்,

தீர்மானிக்கலாம் ;

(3) பெ.வ.அ.கு. குறித்தொதுக்கப்பட்ட அகழ்ந்துதேடும் காணித்துண்டொன்றின் இடப்பரப்பொன்று தொடர்பில், அவ்விடப்பரப்பிலிருந்து பெற்றோலிய வளங்களின் அதிகபட்ச திறமையான மீட்டுப் பெறலை உறுதிப்படுத்தும் காலப் பகுதியொன்றுக்கு அபிவிருத்தி உரிமமொன்றை வழங்குதல் வேண்டும் ; எவ்வாறாயினும் அத்தகைய காலப்பகுதியானது, அத்தகைய அகழ்ந்துதேடும் காணித்துண்டு தொடர்பில் எந்தக் காலப்பகுதிக்கு பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டுள்ளதோ அத்தகைய காலப்பகுதியை விஞ்சுதலாகாது.

(4) பெ.வ.அ.கு. அதன் தத்துவங்களின் தகுந்த பிரயோகத் திற்கு அல்லது அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு, அவசியமானதென பெ.வ.அ.கு. கருதக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவுமாறு ஒப்பந்தக்காரர் ஒருவரை எழுத்திலான அறிவித்தல்மூலம் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் ஒப்பந்தக்காரரின் கடமையாதலும் வேண்டும். இவ்வுட்பிரி வின்கீழ் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப் பாடுகளுக்கு இணங்கியொழுகி, கொடுத்துதவப்பட்ட தகவல் அல்லது ஏதேனும் விவரத்திரட்டின் உள்ளடக்கங்கள் எவையும், அத்தகைய விவரத்திரட்டை அல்லது தகவலைக் கொடுத்துதவும் ஒப்பந்தக்காரரின் சம்மதத்துடன் தவிர அல்லது பெ.வ.அ.கு. வினால் அதன் பணிகளைப் புரிகையில் தவிர வெளி யிடப்படுதலோ அல்லது ஆளெவருக்கும் தெரிவிக்கப்படுதலோ ஆகாது.

பெ.வ.அ.கு. அபிவிருத்தி உரிமத்தின் நிபந்தனைகளின் மீறுகை பற்றி ஒப்பந்தக்காரருக்கு அறிவித்தல்.

**12.** ஒப்பந்தக்காரர் ஒருவர் அபிவிருத்தி உரிமத்துடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகளை மீறுகின்றார் என நம்புவதற்கு பெ.வ..அ.கு.வுக்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து, பெ.வ.அ.கு. —

(அ) சார்த்துரைக்கப்பட்ட மீறுகையைக் குறித்துரைத்து : அத்துடன்

(ஆ) மீறுகையின் விளைவாக எழும் நிலைமையைச் சீராக்குமாறு அல்லது சீராக்குவதற்கு அல்லது திருத்துவதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுக்குமாறு அல்லது மீறுகைக்கு நியாயமான காரணம் காண்பிக்குமாறு அல்லது மீறுகை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவொரு காலப் பகுதிக்குள் நிகழவில்லை எனக் காண்பிக்குமாறு ஒப்பந்தக்காரரைத் தேவைப்படுத்தி : அத்துடன்

(இ) அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுதலில் விளைவு அபிவிருத்தி உரிமம் இடைநிறுத்தப்படல் அல்லது இல்லாதொழிக்கப்படல் விளைவிக்கலாம் எனக் குறிப்பிட்டு

ஒப்பந்தக்காரருக்கு அறிவித்தலொன்றை சேர்ப்பிக்கச் செய்யலாம்.

அபிவிருத்தி உரிமத்தை இடைநிறுத்துதல் அல்லது இல்லாதொழித்தல்.

**13.** (1) எந்த ஒப்பந்தக்காரருக்கு அபிவிருத்தி உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஒப்பந்தக்காரர் ஒருவர் —

(அ) பன்னிரண்டாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுடன் இணங்கியொழுகத் தவறியுள்ளார் என அல்லது அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட மீறுகையின் விளைவாக எழுந்த நிலைமையை சீராக்குவதற்கு அல்லது திருத்துவதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என அல்லது அத்தகைய மீறுகைக்கு நியாயமான காரணத்தைக் காண்பிக்கவில்லை என :

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பெ.வ.அ.கு.வினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் இணங்கியொழுகவில்லை என ; அல்லது

(இ) பெற்றோலியத் தொழிற்பாடுகளை –

(i) பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையின் பாகமாகிய செயற்றிட்டத்திற்கிணங்க : அல்லது

(ii) அபிவிருத்தி உரிமத்திற்கென சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட அபிவிருத்தி மற்றும் முதலீட்டு உத்தேசமொன்றை மேற்கொள்வதை நிறுத்தியுள்ளார் என : அல்லது

(ஈ) அபிவிருத்தி உரிமத்தால் மேவப்பட்ட இடப்பரப்பில் பெற்றோலியத் தொழிற்பாடுகளை கவனத்துடன் மேற்கொள்ளத் தவறியதன்மூலம், அபிவிருத்தி உரிமத்தைக் கைவிட்டுள்ளார் அல்லது அமைய அடிப்படையில் கைவிட்டுள்ளார் என : அல்லது

(உ) அபிவிருத்தி உரிமத்தைத் திருப்பி மீள ஒப்படைத்துள்ளார் என : அல்லது

(ஊ) இச்சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என

பெ.வ.அ.கு. திருப்தியுறுமிடத்து, பெ.வ.அ.கு. அபிவிருத்தி உரிமத்தை இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

(2) பத்தாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அபிவிருத்தி உரிமமொன்றை இடைநிறுத்துவதென்ற அல்லது இல்லாதொழிப்பதென்ற பெ.வ.அ.கு.வின் முடிவொன்றினால் இன்னலுற்ற ஒப்பந்தக்காரர் ஒருவர் விடயத்தைத் தீர்ப்பதற்கு இயைபான பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையின் பாகமாக அமையும் நடுத்தீர்ப்பு ஏற்பாடுகள் எவையுமிருப்பின் அவற்றின் துணையை நாடுதல் முடியும்.

அபிவிருத்தி உரிமத்தின் கீழ் ஒப்பந்தக்காரரின் உரிமைகள்.

**14.** எந்த ஒப்பந்தக்காரருக்கு அபிவிருத்தி உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஒப்பந்தக்காரரொருவர் இச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயைபான பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையின் நியதிகளின்கீழ்

ஒப்பந்தக்காரர் உரித்துடையவராயிருக்கும் பெற்றோலிய வளங்களின் பங்கை மீட்டுப்பெறுவதற்கும், களஞ்சியப் படுத்துவதற்கும் போக்குவரத்து செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் அத்துடன் அத்தகைய பெற்றோலிய வளங்களின் விற்பனை வரும்படிகளை சொந்த நாட்டிற்கு அனுப்புவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும்.

அபிவிருத்தி உரிமத்தில் பங்கேற்கும் அக்கறையைக் கைமாற்றுதல்.

**15.** (1) ஒப்பந்தக்காரர் ஒருவர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும், அதனால் இது தொடர்பாக விதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் அபிவிருத்தி உரிமத்தில் அவரது பங்கேற்கும் அக்கறையைக் கைமாற்றுவதற்கான அல்லது சாட்டுதல் செய்வதற்கான உரிமையைக் கொண்டிருக்கலாம்.

(2) அமைச்சரவை, ஒப்பந்தக்காரர் ஒருவரின் பங்கேற்கும் அக்கறையை கைமாற்றுவதற்கான அல்லது சாட்டுதல் செய்வதற்கான அங்கீகாரத்தை வழங்குதல் வேண்டும் : ஆயினும்,

(அ) சாட்டுதல் பெறுநர் அல்லது கைமாற்றம் பெறுநர் நல்ல நிலைமையிலுள்ளவராகவும் தன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிதி வலிமையுடையவராகவும், தன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பெ.வ.அ.கு.வுக்கு நிபந்தனையற்ற பொறுப்பேற்பொன்றை வழங்குவதற்கும், இயைபான பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு உத்தரவாதங்களை வழங்குவதற்கும் தயாராயிருப்பவராகவும் இருத்தல் வேண்டும் :

(ஆ) சாட்டுதல் பெறுநர் அல்லது கைமாற்றம் பெறுநர், எந்த நாட்டுடன் அரசு வர்த்தகத்தை அல்லது வியாபாரத்தை மட்டுப்படுத்தியுள்ளதோ அந்த நாடொன்றில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாக இல்லாதிருத்தல் வேண்டும் ;

(இ) முறையே சாட்டுதல் செய்பவர் அல்லது கைமாற்றுநர் அல்லது சாட்டுதல் பெறுநர் அல்லது கைமாற்றப் பெறுநர் உடன்படிக்கையின் பயனுறுதியுடனான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சரவையால் விதிக்கப்படக்கூடிய எவையேனும் நியாயமான நிபந்தனைகளுடன் இணங்கியொழுகத் தயாராயிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஈ) சாட்டுதல் அல்லது கைமாற்றுதல் உடன்படிக்கையின் கீழான செயற்பாட்டை அல்லது கடப்பாடுகளை பாதகமாகப் பாதித்தலோ அல்லது எத்தன்மையதுமான ஏதேனும் முறையில், அரசின் அக்கறைகளுக்கு முரணாகச் செயல்படுதலோ ஆகாது.

(3) (அ) ஒரு கைமாற்றத்திற்கான அல்லது சாட்டுதலுக்கான அங்கீகாரத்தைத் தடுக்க வைக்கும் ; அல்லது

(ஆ) எந்த நிபந்தனைகளுக்கமைய கைமாற்றத்திற்கான அல்லது சாட்டுதலுக்கான அங்கீகாரம் வழங்கப்படுகின்றதோ அந்த நிபந்தனைகளை விதிக்கும்.

அமைச்சரவையின் முடிவொன்றால் இன்னலுற்ற ஒப்பந்தக்காரர் ஒருவர், அவ்விடயத்தைத் தீர்ப்பதற்கு இயைபான பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறையின் துணையை நாடலாம்.

சேவை உப ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமமளித்தல்.

16. (1) ஆளெவரும், பெ.வ.அ.கு. வினால் அதற்கென வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி பெற்றோலிய தொழிற்பாடுகளின் சேவை உப ஒப்பந்தக்காரர் ஒருவராக வியாபாரத்தைக் கொண்டு நடாத்துதலாகாது.

(2) பெற்றோலியத் தொழிற்பாடுகளின் சேவை உப ஒப்பந்தக்காரர் ஒருவராக வியாபாரத்தைக் கொண்டு நடாத்த விழையும் ஒவ்வோராளும், அதன் பொருட்டு உரிமம் ஒன்றிற்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் பெ.வ.அ.கு.வுக்கு விண்ணப்பிக்கலாம்.

(3) பெ.வ.அ.கு., (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பமொன்றினைப் பெற்றுக்கொண்டதன் மீது, விண்ணப்பகாரர் அத்தகைய வியாபாரத்தைக் கொண்டு நடாத்துவதற்குத் தொழில்நுட்ப ரீதியில் தகைமையுடையவர் எனவும், நல்ல நிதி நிலைமையில் உள்ளவர் எனவும், பெ.வ.அ.கு. திருப்தியுற்றால், உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துவதற்கு விண்ணப்பக்காரருக்கு அதிகாரமளித்து உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

**அபிவிருத்தி உரிமத்தில் பங்கேற்கும் அக்கறையுடைய ஆட்களின் பொறுப்பு.**

**17.** பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றின் நியதிகள் எப்படியிருப்பினும், அபிவிருத்தி உரிமத்தில் பங்கேற்கும் அக்கறையுடைய எல்லா ஆட்களும் —

(அ) பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையின் நியதிகளுடன் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துவதற்கும் ;

(ஆ) அபிவிருத்தி உரிமமொன்றின் நிபந்தனைகளும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளும் இணங்கியொழுகப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் ;

(இ) அபிவிருத்தி உரிமத்தில் விவரிக்கப்பட்ட இடப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளிலிருந்து ஏற்படும் ஊறு, சேதம் என்பவற்றிற்கு மூன்றாம் திறத்தவர்களுக்கும்,

பொறுப்புடையவர்களாதல் வேண்டும்.

கூறுகளின் அபிவிருத்தி.

18. (1) பெற்றோலியவளத் தேக்கமொன்றின் ஒரு பகுதியானது, வேறோர் ஒப்பந்தக்காரர் அக்கறையொன்றைக் கொண்டுள்ள வேறோர் அகழ்ந்துதேடும் காணித்துண்டில் அமைந்திருக்கு மிடத்தும், அத்துடன் முழுத்தேக்கமும் வர்த்தக அடிப்படை யொன்றில் மேலும் திறமையாக ஒருமித்து அபிவிருத்தி செய்ய முடியுமாயிருக்குமிடத்தும் பெ.வ.அ.கு. அத்தகைய பெற்றோ லிய வளங்களின் மேலும் பயனுறுதியுடைய அகழ்ந்து தேடுதலை அடைவதற்கு அத்தகைய மற்றைய ஒப்பந்தக்காரருக்கு எழுத் திலான அறிவித்தலின் மூலம் பெற்றோலியவளத் தேக்கத்தின் கூட்டு அபிவிருத்திக்கு அத்தகைய வேறு திறத்தவர்களுடன் கூறு அபிவிருத்தி உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளுமாறு ஒப்பந்தக்காரரைத் தேவைப்படுத்தலாம்.

(2) (அ) கூட்டுப் பெற்றோலியத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்கள் பெ.வ.அ.கு. வின் அங்கீகாரத்துடன் கூறு அபிவிருத்தி உடன் படிக்கையொன்றைச் செய்துகொள்ளுமிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய ஒப்பந்தக்காரர்கள் ஒவ்வொருவரும் தங்களது பல்வேறு அகழந்துதேடும் காணித் துண்டுகளின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள பொதுவான ஒரு பெற்றோலியத் தேக்கம் தொடர்பில் அல்லது தங்களது பல்வேறு அபிவிருத்தி உரிமங்களால் மேவப்பட்ட இடப் பரப்புகள் தொடர்பில் அவர்கள் கூட்டுப் பெற்றோலியத் தொழிற்பாடுகளை மேற்கொள் ளுதல் வேண்டுமென்பது அவர்களுக்கு வழங்கப் பட்ட அபிவிருத்தி உரிமத்தின் நிபந்தனை யொன்றாக இருக்குமிடத்து,

பெ.வ.அ.கு. அத்தகைய தேக்கத்தின் கூறு அபிவிருத்தியில் பங்கு பற்றுமாறு அத்தகைய ஒப்பந்தக்காரர்களைப் பணிக்க லாம்.

**19.** (1) விடயத்துக்கேற்ப, பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றின் கீழ் அல்லது அபிவிருத்தி உரிமமொன்றின் கீழ் ஒப்பந்தக்காரர் ஒருவரால் மேற்கொள்ளப்படும் அல்லது மேற்கொள்ள உத்தேசிக்கப்படும் பெற்றோலியத் தொழிற்பாடுகளுக்கு அவர் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைத் தேவைப்படுத்துமிடத்து, அத்தகைய தேவைப்பாட்டைப் பற்றி அவர் பெ.வ.அ.கு.வுக்கு அறிவிக்குமிடத்தும், அத்தகைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் பெ.வ.அ.கு.வின் வியாபாரத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படுத்தப்பட்ட ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அரசாங்கத்தால் கொள்ளப்பட்டு ஒப்பந்தக்காரருக்குக் கிடைக்கச் செய்விக்கப்படலாம். ஆயின், அத்தகைய கொள்ளலானது விடயத்தின் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு அவசியமாகவிருப்பதாக பெ.வ.அ.கு. கருதுதல் வேண்டும். ஒப்பந்தக்காரர்களுக்கு ஆதனத்தைக் கொள்ளுதல்.

(2) ஒராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் கொள்ளலுக்கு பெ.வ.அ.கு. வினால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் பணத்தொகை, ஒப்பந்தக்காரரால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தொகையானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் கணிப்பிடப்படுதலும் வேண்டும்.

## பாகம் IV

### செயலாகத்தின் பணிகள்

**20.** (1) பெற்றோலிய வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதியின் தலைமையிலான செயலகமொன்றிருத்தல் வேண்டும். செயலகம் அமைச்சரவையால் காலத்துக்குக்காலம் அதற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான அத்தகைய பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். செயலகமானது, அரசுடன் செய்து கொள்ளப்பட்ட பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கைகள் தொடர்பில் எல்லா நோக்கங்களுக்காகவும் அரசுக்காகவும் அதன் சார்பிலும் செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன் – செயலகம்.

(அ) அத்தகைய உடன்படிக்கைகளின்கீழ் ஒப்பந்தக்காரர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு வேலைத் திட்டங்களையும் வரவு செலவுத் திட்டங்களையும் அங்கீகரிப்பதற்கும் ;

(ஆ) அத்தகைய உடன்படிக்கையின்கீழ் பெற்றோலிய வளங்களின் அரசுக்குரிய பங்கை அறவிடுவதற்கும் அதன் விற்பனை, அதனை களஞ்சியப்படுத்துதல், போக்குவரத்து என்பனவற்றிற்கு ஏற்பாடு செய்வதற்கும் ;

(இ) பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை தொடர்பில் அரசின் ஒப்பந்த மற்றும் தொழிற்பாட்டு அக்கறைகள் தொடர்பான ஏனைய பணிகளை நிறைவேற்றுவதற்குமான,

உரிமையைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பெ.வ.அ.கு. வானது 6 ஆம் பிரிவின் பந்திகள் (அ), (இ), (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஔ) என்பவற்றால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களையும் பணிகளையும் பெற்றோலிய வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கையளிக்கலாம்.

பகிரங்க சேவை முதலியவற்றிலுள்ள அலுவலர்களின் மாற்றுச் சேவை.

**21.** (1) செயலகத்தின் வேண்டுகோளின் பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் அந்த அலுவலரினதும் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், செயலகத்தால் அதேபோன்ற சம்மதத்துடன் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு செயலகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே சம்மதத்துடன் செயகத்திற்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) எவரேனும் அலுவலர் செயலகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) எவரேனும் அலுவலர் செயலகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று கூட்டுத்தாபனத்தால் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆளெவரும் அவ்வலுவலரினதும் கூட்டுத்தாபனத்தினதும் சம்மதத்துடன் செயலகத்தின் பணியாட்டொகுதி ஒன்றில் தற்காலிகமாக அன்றேல் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) செயலகம், அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளவரும் அதன்மூலம் குறித்துரைக்கப்பட்டவொரு காலப் பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவையாற்ற உடன்பட்டுள்ள வருமான ஆளெவரையும் தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் செயலகத்துடனான ஏதேனும் சேவைக்காலப் பகுதியானது, அத்தகைய ஒப்பந்தத்தின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் V

### நிதிசார்ந்த ஏற்பாடுகள்

22. (1) பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கை ஒவ்வொன்றும் அத்தகைய உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளிலிருந்து மீட்டுப் பெறப்பட்ட பெற்றோலிய வளங்களின் எந்தப் பங்குகளுக்கு முறையே ஒப்பந்தக்காரருக்கும் அரசுக்கும் உரித்துண்டோ அந்தப் பங்குகளை குறித்துரைத்தல் வேண்டும்.

உற்பத்தியைப் பகிர்ந்து கொள்வல் முதலியன பற்றிய நியதிகள்.

(2) பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கை பின்வரும் நிதிசார்ந்த விடயங்களுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் :—

(அ) உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பெற்றோலியத் தொழிற்பாடுகளுக்கான ஒப்பந்தக்காரரின் செலவுகளின் அறவீடு ;

(ஆ) மீட்டுப் பெறப்பட்ட பெற்றோலிய வளங்களின் பங்கொன்றுக்கு அரசின் உரித்திலான ஏதேனும் அதிகரிப்பு ; அத்தகைய அதிகரிப்பு, ஒப்பந்தக்காரருக்கு பெற்றோலியத் தொழிற்பாடுகளின் இலாப வாய்ப்பின் விகிதாசாரத்தில் இருத்தல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மீட்டுப் பெறப்பட்ட பெற்றோலிய வளங்களின் மொத்தத்தின் மீது பெற்றோலிய வளத்தின் அரசுரிமைப் பணமொன்றின் கொடுப்பனவு ; அத்துடன்

(ஈ) ஒப்பந்தக்காரரால் அரசுக்குச் செலுத்தப்படக்கூடிய மிகையூதியம், ஏதுமிருப்பின்.

வரி முதலியவற்றின் அறிவிப்புகளின் விடயத்தில் நியதிகளின் தாக்கங்கள்.

**23.** பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கை ஒவ்வொன்றிலும், பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன் படிக்கை செய்துகொள்ளப்பட்ட தேதியன்று வலுவிலிருந்த வரிகளுக்கு, கட்டணங்களுக்கு அல்லது விதிப்பனவுகளுக்கு மேலதிகமாக, ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையின் கீழ் ஒப்பந்தக் காரரின் எந்த வருமானத்திற்கு அல்லது பெற்றோலிய வளங்களின் பங்கிற்கு உரித்துடையவராகின்றாரோ அந்த வருமானத்தின் மீது அல்லது பெற்றோலிய வளளங்களின் பங்கின்மீது; வரிகளை, கட்டணங்களை அல்லது விதிப்பனவு களை விதித்து, விடயத்திற்கேற்ப, ஏதேனும் சட்டம் அல்லது ஒழுங்குவிதி ஆக்கப்படும் பட்சத்தில் அல்லது பிரகடனப் படுத்தப்படும் பட்சத்தில் மீட்டுப் பெறப்பட்ட பெற்றோலிய வளங்களின் பங்கொன்றுக்கு ஒப்பந்தக்காரரின் உரித்தில் சீராக்கம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்யும் நியதிகள் அடங்குதல் வேண்டும்.

இலாபங்களை யும் வருமானத் தையும் தீர்மானித்தல்.

**24.** பெற்றோலிய வளங்களை அகழ்ந்து தேடுதல் அல்லது பயன்படுத்துதல் தொடர்பிலான எவையேனும் தொழிற்பாடு களிலிருந்து ஒப்பந்தக்காரரின் இலாபங்களுக்கும் வருமானத் திற்கும் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பெற்றோலிய வளங்கள் அரசுரிமைப் பணம்.

**25.** (1) ஒப்பந்தக்காரர், அபிவிருத்தி உரிமமொன்றின் கீழ் மீட்டுப் பெறப்பட்டவாறான எல்லாப் பெற்றோலிய வளங்களி னதும் பெறுமதியின் மீது பெற்றோலிய வளங்கள் அரசுரிமைப் பணமொன்றை அரசுக்குச் செலுத்துதல் வேண்டும் என்பது டன் அரசானது பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக் கையில் விதித்துரைக்கப்பட்டவாறு அரசுரிமைப் பணத்தை காசாகவோ அல்லது பணமாகவோ பெறுவதற்கான விருப்புத் தெரிவையும் கொண்டிருக்கும்.

(2) மீட்டுப் பெறப்பட்ட பெற்றோலிய வளங்களை அறவீடு செய்வதற்கான முறைகளும் அரசுரிமைப் பணத்தின் கொடுப்பனவுக்கான காலப்பகுதியும் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

26. (1) மீட்டுப் பெறப்பட்ட பெற்றோலிய வளங்களின் ஒப்பந்தக்காரரது பங்கு எல்லா சுங்கத்தீர்வைகளிலிருந்தும் ஏற்றுமதித் தீர்வைகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். சுங்கத் தீர்வை முதலியவற்றி லிருந்து விலக்களிப்புகள்.

(2) ஒப்பந்தக்காரர் ஒருவர் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றின் நியதிகளின் கீழ் பெற்றோலியத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக அவரால் இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் பொறித்தொகுதியின் மீது அல்லது உபகரணத்தின்மீது செலுத்தப்படற்பாலதான சுங்கத்தீர்வையின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும், என்பதுடன் அத்தகைய பொறித்தொகுதியின் அல்லது உபகரணத்தின் மீள ஏற்றுமதியின் மீது ஏற்றுமதித் தீர்வை எதுவும் செலுத்தப்படற்பாலதாதலாகாது.

## பாகம் VI

### பொதுவானவை

27. (1) இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காகவும் அல்லது அவற்றிற்குப் பயனளிப்பதற்காகவும் அத்துடன் விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் சௌகரியப்படக்கூடியவாறான விரைவில் அங்கீகாரத்திற்காக

பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் அத்தகைய ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதற்குமுன்னர் அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதியொன்று எந்தத் தேதியின்று இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

உட்பிரவேசிப்பதற்கான தத்துவங்கள்.

**28.** பெ.வ.அ.கு. வினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும் பெற்றோலியத் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்படும் ஏதேனும் தலத்திற்குட் பிரவேசித்து, சோதனை செய்யலாம் என்பதுடன் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றின் நியதிகள் அல்லது அபிவிருத்தி உரிமமொன்று தொடர்பில் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் அல்லது இச்சட்டத்தின அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏற்பாடு எதுவும் இணங்கியொழுகப்படுகின்றதா என நிச்சயிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய புலனாய்வுகளை அல்லது கணிப்பீடுகளை அதன் மீது மேற்கொள்ளலாம்.

தவறுகள்.

**29.** (1) (அ) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக பெற்றோலியத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுகின்ற ;

(ஆ) 29 ஆம் பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அல்லது அலுவலரால் இச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அவருக்குரித்தாக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்தகைய ஆளைத் தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற ;

(இ) நியாயமான ஏதுவின்றி 6 ஆம் பிரிவின் (ங) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற ;

(ஈ) ஆறாம் பிரிவின் கீழ் அவரால் கொடுத்துதவப் பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் அல்லது தகவலில் அல்லது அகழ்ந்து தேடும் காணித் துண்டொன்று தொடர்பில் பெற்றோலிய வளங் கள் சார்ந்த உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதற்கான ஏதேனும் விண்ணப்பத்தில், அறிந்திருந்தும் ஏதேனும் பொய்யான கூற்றைச் செய்கின்ற ;

(உ) ஆறாம் பிரிவின் கீழ் அவரினால் கொடுத்துதவப் படும் ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் அல்லது அகழ்ந்து தேடும் காணித் துண்டொன்று தொடர்பில் பெற்றோலிய வளங் கள் உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்வதற்கான ஏதேனும் விண்ணப்பத்தில் வேண்டுமென்று ஏதேனும் முக்கியமான விடயத்தை விட்டுவிடுகின்ற ;

(ஊ) எவையேனும் பெற்றோலியத் தொழிற்பாடு களை வேண்டுமென்றே சேதப்படுத்துகின்ற அல்லது சதிநாசம் செய்கின்ற ;

(எ) அரசுக்கு அதன் பெற்றோலிய வளங்களின் அல்லது பெற்றோலிய வளங்கள் அரசுரிமைப் பணத்தின் பங்கை மோசடியாக அல்லது அசட்டையாக இழப்பிக்கின்ற ;

(ஏ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை மீறுகின்ற,

ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலை யில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மீது நாற்பதுலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் பத்துக் கோடி ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன் றுக்கு அல்லது ஓராண்டிற்கு மேற்படாதவொரு காலப்பகுதிக் கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்

என்பதுடன் அவர் எந்தத் தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக் கப்படுகின்றாரோ அந்தத் தவறு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னரும் தொடருமாயின் அவர் மேலும் ஒரு தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் அதன் தொடர்பில் தவறு தொடர்ந்துறும் நாளொவ்வொன்றிற்கும் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவின் (எ) என்னும் பந்தியின் கீழ் தவறொன்றிற்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது நீதிவான், தவறாக அமையும் செயலின் விளைவாக அரசினால் இழக்கப்பட்ட பெற்றோலிய வளங்களின் அல்லது பெற்றோ லிய வளங்கள் அரசுரிமைப் பணத்தின் பெறுமதிக்குச் சமமானவாறான அத்தகைய பணத்தொகையிலான நட்டஈட்டை அரசுக்குச் செலுத்துமாறு தவறாளருக்குக் கட்டளையிடலாம்.

ஆட்களின் குழுக்களால் புரியப்படும் தவறுகள்.

**30.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, தவறு புரியப்பட்ட நேரத்தில் அந்த கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒரு பணிப்பாளராக, முகாமையாளராக, செயலாளராக அல்லது அதனையொத்த வேறு அலுவலராக இருந்த ஒவ்வோராளும் அவரது சம்மதமோ அல்லது ஒத்தாசையோ இல்லாமலேயே தவறு புரியப்பட்டது எனவும், எல்லா சந்தர்ப்பங்களிலும் அவரது பணிகளின் தன்மையை கருத்திற்கொண்டு தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு அவரால் பிரயோகித் திருக்கப்படவேண்டியவாறான அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் புரிந்தார் எனவும் எண்பித்தாலன்றி அத்தவ றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்.

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தைத் திருத்துதல்.

**31.** 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவுகள் 5ஈ, 5ஊ, 5எ அத்துடன் 34அ என்பன இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றன.

இச்சட்டம் ஏனைய சட்டத்தை மேலோங்கி நிற்றல்.

**32.** எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனு றுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

33. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

34. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

பொருள்கோடல்.

"அணித்தாயுள்ள வலயம்" என்பது, தேசிய அரசுப் பேரவையின் 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கக் கடலோர வலயங்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட பிரகடனத்தால் இலங்கையில் அணித்தாயுள்ள வலயமாக வெளிப்படுத்தப்பட்ட வலயம் என்று பொருளாகும் ;

"பெருநிலப்பகுதி வரம்பு" என்பது, 1982 ஆம் ஆண்டின் கடற் சட்டத்தின்மீது ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் 26 ஆம் உறுப்புரையில் வரைவிலக்கணம் கூறப்பட்ட கடற்படுகையும் அடி மண்ணும் என்று பொருள்படும்;

"ஒப்பந்தக்காரர்" என்பது, பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையொன்றின்கீழ் பெற்றோலியத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆளெவரும் அல்லது ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழு என்று பொருள்படும் என்பதுடன் கூட்டு முயற்சித் தொழிற்பாடுகளை உள்ளடக்குதலும் வேண்டும் ;

"கூட்டுத்தாபனம்" என்பது, 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்று பொருள்படும் ;

"அபிவிருத்தி உரிமம்" என்பது, 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட அகழ்ந்துதேடும் காணித்துண்டொன்றின் குறித்தொதுக்கப்பட்ட இடப்பரப்பொன்றில் வர்த்தக ரீதியிலான தொகைகளில் பெற்றோலிய வளங்களை மீட்டுப் பெறுவதற்கும் சேமிப்பதற்குமான அதிகாரம் என்று பொருள்படும் ;

"பெற்றோலிய வளங்கள் பணிப்பாளர் தலைமையதிபதி (பெ.வ.ப.)" என்பது, அமைச்சரவையால் அரசாங்கத்தின் முகவராக அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கென தாபிக்கப்படவுள்ள செயலகத்தின் தலைவர் என்று பொருள்படும் ;

"புறநீங்கலான பொருளாதார வலயம்" என்பது, தேசிய பேரவையின் 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கக் கடலோர வலயங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பிரகடனத்தால் வெளிப்படுத்தப்பட்ட வலயம் என்று பொருள்படும் ;

"அகழ்ந்து தேடும் காணித்துண்டு" என்பது, இயைபான பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையில் தரப்பட்டுள்ள அகழ்ந்து தேடும் காணித்துண்டொன்று என்று பொருள்படும் ;

"பாரம்பரிய நீர்ப்பரப்புகள்" என்பது, தேசிய அரசுப் பேரவையின் 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கக் கடலோர வலயங்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பிரகடனத்தால் வெளிப்படுத்தப்பட்ட பாரம்பரிய நீர்ப்பரப்புகளின் எல்லைகள் என்று பொருள்படும் ;

"முதலீட்டாளர்" என்பது, தனியார்துறை முதலீட்டாளர், பகிரங்கத்துறை முதலீட்டாளர் மற்றும் அரச முகவர் நிலையம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனம் என்பவற்றை உள்ளடக்கலாம் ;

"அமைச்சர்" என்பது, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சா: எனப் பொருள்படும் ;

"பங்கேற்கும் அக்கறை" என்பது, அபிவிருத்தி உரிமம் ஒன்றின்கீழ் மீட்டுப்பெறப்பட்டு சேமிக்கப்பட்டதும் பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கையில் தரப்பட்டுள்ளதுமான பெற்றோலிய வளங்களின் பங்கில் நூற்றுவீதமொன்றிற்கான உரிமமொன்றாக வெளிப்படுத்தப்பட்ட ஓர் அக்கறை என்று பொருள்படும்;

"பெற்றோலியத் தொழிற்பாடுகள்" என்பது, புவிசரிதவியல் நில அளைவகள் புவி நடுககத் தரவுகளின் பொருள் கோடல், கிணறு துளைத்தல் உற்பத்திப் பொருள் சோதனை, வேறுபடுத்துதல், முறை வழிப்படுத்து தல், களஞ்சியப்படுத்துதல், போக்குவரத்து செய்தல் அத்துடன் சந்தைப்படுத்துதல் என்பன உட்பட, ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படாமல் பெற் றோலிய வளங்களை ஆய்ந்து தேடுதல், அபிவிருத்தி செய்தல், மீட்டுப் பெறுதல் என்பவற்றிலான செயற் பாடுகள் என்று பொருள்படும் ;

"பெற்றோலியத் தேக்கம்" என்பது, இயற்கையாக நிகழு கின்ற பெற்றோலியத்தின் தொடர்ச்சியற்ற ஒரு திரள்வு என்று பொருள்படும் ;

"பெற்றோலிய வளங்கள்" என்பது, நீருடன் இணைந்த எண்ணெய் அல்லது வாயு,, கந்தகம் மற்றும் ஒரே இடத்தில் அமைந்துள்ள அல்லது பெற்றோலியத் தொழிற்பாடுகளால் மீட்டுப் பெறப்பட்ட ஐதரோ காபன்களுடன் தொடர்புடைய இதனையொத்த வேறு பதார்த்தங்கள் உட்பட இயற்கைத் திரவத்தில், வாயு தன்மையில், திரவத் தன்மையிலாயினுஞ்சரி ஓரளவு திரத்தின்மையிலாயினுஞ்சரி, சுத்திகரிக்கப்படாத எண்ணெய், இயற்கை வாயு மற்றும் ஐதரோ காபன்கள் என்று பொருள்படும் ;

"பெற்றோலிய வளங்கள் சார்ந்த உடன்படிக்கை" என்பது, உற்பத்திப் பகிர்வுக்கென அரசுக்கும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரருக்கும் இடையில் இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்து கொள்ளப்படும் ஓர் ஒப்பந்தம் என்று பொருள்படும்;

"பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திக் குழு" என்பது, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தாபிக்கப்படவுள்ள குழு என்று பொருள்படும் ;

"பெற்றோலிய வளங்கள் அரசுரிமைப் பணம்" என்பது, ஒப்பந்தக்காரர் ஒருவரால் அபிவிருத்தி உரிமமொன்றினால் வேறுபட்ட இடப்பரப்பிலிருந்து மீட்டுப் பெறப்பட்ட எல்லா பெற்றோலிய வளங்களினதும் சந்தைப் பெறுமதியின்மீது அவரால் செலுத்தப் படற்பாலதான அரசுரிமைப்பணம் என்று பொருள் படும் ;

"சேவை உப ஒப்பந்தக்காரர்" என்பது, ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு அல்லது அவர் சார்பில் பெற்றோலிய தொழிற்பாடுகளுக்கான ஒப்பந்தக்காரர் ஒருவரால் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்கும் ஆளொருவர் என்று பொருள்படும் ;

"ஆள்புலக் கடற்பரப்பு" என்பது, தேசிய அரசுப் பேரவையின் 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலையங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட பிரகடனத்தினால் இலங்கை ஆள்புல கடற்பரப்பாக வெளிப்படுத்தப்பட்ட கடல் எல்லைகள் என்று பொருள்படும் ;

"கூறு அபிவிருத்தி" என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆய்ந்து தேடும் காணித்துண்டுகளின் எல்லைகளுக்குள் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அபிவிருத்தி உரிமங்களால் மேவப்பட்ட இடப்பரப்பிற்குள் அமைந்துள்ள பொதுத் தேக்கமொன்றின் அபிவிருத்தி என்று பொருள் படும் ;

"கூறு அபிவிருத்தி உடன்படிக்கை" என்பது, பெற்றோலியவளத்தின் பொது தேக்கமொன்று தொடர்பில் பெற்றோலிய தொழிற்பாடுகளை கூட்டாக மேற்கொள்வதற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கிடையிலான ஏற்பாடொன்று என்று பொருள்படும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*